[1970 மார்ச் 12

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி கடலோரப் பகுதியில் முத்துக்கள் கிடைப்பதைப் போன்று உவரி கடலோரப் பகுதிகளில் விலை உயர்ந்த பவளங்கள் கிடைப்பதற்கு அறிகுறியாக சிறு சிப்பிகள் போன்றவை கடலோரத்தில் ஒதுங்குவதாக மீனவர்கள் குறிப்பிடுகிருர்கள். இதைப் பற்றி ஆய்வு செய்து விலை உயர்ந்த பவளங்கள் அங்கு இருக்குமானல் அதைக் கண்டுபிடித்து எடுக்க அரசு தரப்பில் முன்வருவார்களா?

மாண்புமிகு திருகு செ. மாதவன் : இதைப்பற்றி ஏற்கனவே ஜியாலஜிகல் துறையினர் ஆய்வு செய்தனர். அந்த ஆராய்ச்சியின் பேரில் பவளங்கள் கிடைப்பதாக, பொருளாதார வசதிக்கு ஏற்றவாறு கிடைப்பதாக ஆதாரம் இல்லையென்று சொல்லியிருக்கிருர்கள். During the survey the occurrence of garnet sands (Iron Aluminimum Silicates) இருப்பதாகத்தான் கூறியிருக்கிருர்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அழகாய் முத்துக் குவியும் கடல்கள் என்று புலவர்களால் புகழப்பட்ட தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் முத்துக் குவியல்களும், எந்தெந்த இடங்களில் பவளக் குவியல்களும் கிடைக்கின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புலவர்கள் ஏராளமாகப் பாடிச் சென்றிருக்கிருர்கள். அவர்கள் பாடியதெல்லாம் கிடைப்பதாகத் தெரியவில்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : உவரி பக்கம் கிடைக்கும் கார்னேட் சான்டைப் பயன்படுத்தி தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்பது அரசின் பரிசிலனையில் இருக்கிறதா? அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது பற்றிய விவரம் இல்லை.

பேப்பர் இறக்குமதி

*336 வினு—திரு. கே. போஜன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நம் மாநிலத்திற்கு வெளி மாநிலங்களிலிருந்தோ வெளி நாடுகளிலிருந்தோ பேப்பர் இறக்குமதி செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில், ஆண்டொன்றுக்கு எவ்வளவு இறக்குமதி செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

---

* 375-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1970 மார்ச் 12]

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த விவர அறிக்கையிலே 1965-66 முதல் 1967-68 வரை பார்த்தால் இந்தியாவுக்குள் இருக்கும் மற்ற மாநிலங்களில் இருந்து வரக்கூடிய பேப்பர் குறைந்திருக்கிறது ; வெளிநாடுகளில் இருந்து வரக்கூடிய பேப்பர் அதிகமாகிக் கொண்டு வந்திருக்கிறது. அதற்கான காரணம் என்ன? இங்கு எல்லா பேப்பர் மில்களும் இருந்தும் குறைந்த விலையில் போதுமான அளவுக்குக் கொடுக்க மறுக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நமக்குத் தேவையான தாள்களில் பலவிதமான தாள்கள் உண்டு. நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யக் கூடிய தாள்களைத் தவிர, வெளிநாடுகளில் இருந்து வாங்க வேண்டிய தாள்கள் ஏராளமாக இருக்கின்றன. அதனால் இந்தப் புள்ளிவிவரத்தில் வித்தியாசம் வருகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால்—

M.F. Printing
Poster
Duplex Boards
Unbleached Printing
Cream Laid
Bond
Azure Laid

என்ற தாள்கள் வேறு மாநிலங்களில் இருந்து வருகின்றன.

Special Electrical Insulation Paper
Special Kraft Paper
Some varieties of newsprint.

என்ற தாள்கள் வெளிநாடுகளில் இருந்து வருகின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is possibility of producing paper in Hosur taluk where bamboo is grown abundantly. In view of that will this Government think of opening a paper factory at Hosur taluk?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேப்பர் தொழிற்சாலை அமைக்க மூலப்பொருள் என்ன கிடைக்கிறது என்பதைப் பார்த்து அமைக்க வேண்டும். நம்முடைய மாநிலத்தில் ஏற்கனவே இருக்கக் கூடிய பேப்பர் மில்களிலே உற்பத்தி செய்யக்கூடிய திறன் மீதம் இருக்கிறது. அவற்றைப் பயன்படுத்திக் கொண்ட பிறகுதான் புதிய தொழிற்சாலை பற்றி ஆராய முடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தற்போது முத்திரைத் தாள்கள் தட்டுப்பாடாக இருக்கிறது. அவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறார்களா ? அந்தத் தாள்கள் போதிய அளவு கிடைக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஸ்டாம்ப் பேப்பரை மத்திய அரசாங்கம் அடிக்கிறது. நம்முடைய மாநிலத்தில் தேவையான அளவுக்கு அவை கிடைக்கவில்லை என்று அவர்களிடம் அறிவித்த போது அந்தப் பேப்பர் வெளிநாடுகளில் இருந்து கிடைப்பதிலே

சங்கடங்கள் இருக்கின்றன என்றூர்கள். ஸ்டாம்ப் ஒட்டாமல் பணம் வசூலிப்பதற்கான ஏற்பாடுகள் இடைக்காலத்தில் செய்யப் பட்டிருக்கின்றன.

திரு. எம். பூபதி : பள்ளியில் படிக்கும் ஏழைக் குழந்தை களுக்குப் புத்தகங்கள் கொடுக்க வெளிநாடுகளில் இருந்து ஏராளமான பேப்பர்கள் வந்தன. எந்த அளவுக்கு அவை ஏழைக் குழந்தைகளுக்குப் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கல்வித் துறை மானியத்தில் கேட்கலாம்.

Increase of price on hosieries.

* 337 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the South India Hosiery Manufacturers' Association has increased the prices of all its commodities from about 24th June 1969?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தென்னிந்திய ஹோசியரி உற்பத்தியாளர் சங்கத்தைச் சார்ந்த சில உறுப்பினர்களே கீழ்க் கண்டவாறு பனியன் விலையை மட்டும் உயர்த்தியுள்ளனர்.

ரகம்	பழைய விலை	இப்போதைய விலை
	ரூ.	ரூ.
பனியன் (உயர்ந்த ரகம்)	23–00 டஜன்	23–50 டஜன்
பனியன் (பின்னிய ரகம்)	21–00 டஜன்	21–75 டஜன்
பனியன் (சாதாரண ரகம்)	15–75 டஜன்	16–25 டஜன்

திரு. என். எஸ். வி. சித்தன் : இதுபோன்று பனியன்கள் மேஜோடுகள் விலை உயர்வால் பெரும்பாலும் நடுத்தர மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். ஒரு சில ரக பனியன்களின் விலை மட்டும் உயர்ந்திருப்பதற்குக் காரணம் என்ன ? இந்த விலை உயர்வை நியாயம் என்று அரசாங்கம் கருதுகிறதா ? இதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மூலப் பொருள் விலையேற்றம், இடைக்காலத்தில் தொழிலாளர்களுக்குக் கொடுத்த ஊதிய உயர்வு இவைகளின் அடிப்படையில் விலையேற்றியதாக விளக்கம் கொடுத் திருக்கிறார்கள். பொது மக்களைப் பாதிக்கும் அளவுக்கு இருக்கு மானால் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கும். தற்போது ஒரு டஜனுக்கு 50 காசு, 75 காசு என்ற அளவுக்குத்தான் உயர்வு ஏற்பட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி : பனியன் உற்பத்தியாளர் விலையை உயர்த்தி யதற்கான காரணம் நூல் விலை அதிகரித்ததுதான் என்பதை அரசு உணருமா ? நூல் விலையைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?